உ

திருச்சிற்றம்பலம்,

திருவருட்பிரகாசவள்ளலார்

என்னும்

சிதம்பரம்இராமலிங்கப்பிள்ளை

திருவாய்மலர்ந்தருளிய

நடராஜபதிமாலை.

இஃது.
சிதம்பரம்
வே, சுந்தரம்பிள்ளைகேட்டுக்கொண்டபடி
இஃது சரவணபுரம்.
சண்முகமுதலியாரவர்களால்
பார்வையிடப்பட்டு.
புரசைபாக்கம்.
ஏழுமலைப்பிள்ளையவர்களது
விவேகவிளக்கவச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
சித்திரபானு௵

உ

திருச்சிற்றம்பலம்.

நடராஜபதி மாலை

அருணிலைவிளங்குஞ் சிற்றம்பலமெனுஞ்
சிவசுகாதீதவெளிநடுவிலே
யண்டபகிரண்டகோடிகளுஞ் சராசரமனைத்துமவை
யாக்கன்முதலாம்
பொருணிலைச்சத்தரொடு சத்திகளனந்தமும்
பொற்பொடு விளங்கியோங்கப்
புறப்புறமகப்புறம் புறமகமிவற்றின்மேற்
பூரணாகாரமாகித்
தெருநிலைச்சச்சிதானந்த நிருதிகள்
சிறப்பமுதலந்தமின்றித்
திகழ்கின்றமெஞ்ஞானசித்தியனுபவநிலை
தெளிந்திடவயங்குசுடரே
சுருநிலைக்குழலம்மையானந்தவல்லிசிவ
சுந்தரிக்கினியதுணையே
சுத்தசிவசன்மார்க்கசற்குருவே யருட்பெருஞ்
ஜோதிநடராஜபதியே, (க)

என்னியலுடம்பிலே யென்பிலேயன்பிலே
யிதயத்திலே தயவிலே
என்னுயிரிலே யென்றனுயிரினுக்குயிரிலே
என்னியர்க்குணமதனிலே
இன்னியலென்வாக்கிலேயென்னுடையநாக்கிலே
யென்செவிப்புலநிசையிலே
என்னிருகண்மணியிலே என்கண்மணியொளியிலே
யென்னனுபவந்தன்னிலே
தன்னியலென்னறிவிலே யறிவினுக்கறிவிலே
தானேகலந்துமுழுதுந்
தன்மயமதாக்கியே தித்தித்துமென்மேற்
றதும்பிநிறைந்தின்றவமுதே
துன்னியபெருங்கருணைவெள்ளமே
யழியாதசுகமே சுகாதீதமே
சுத்தசிவசன்மார்க்க நிதியேயருட்பெருஞ்
சோதிநடராஜபதியே (௨)
உடலெலாமுயிரெலா முணர்வெலா
முள்ளனவெலாங்கலந்தே
தனிமயமதாக்கி யிருநீக்கியெக்காலத்து
முதயாத்தமானமின்றி
இடமெலாம்வல்லசிவசத்திகிரணங்கியாய்
ஏகமாய்யேகபோக

இன்பநிலையென்னுமொரு சிற்சபையினடுவே
யிலங்கிநிறைகின்றசுடரே
கடலெலாம்புவியெலாங்கனலெலாம்வளியெலாங்
ககனெலாங்கண்டபரமே
காணாதபொருளெனக்கலையெலாம்புகலவென்
கண்காணவந்தபொருளே
தொடலெலாம் பெறவெனக்குள்ளும்புறத்தும்
மெய்த்துணையாய் விளங்குமறிவே
சுத்தசிவசன்மார்க்கநிதியே யருட்பெருஞ்
ஜோதிநடராஜபதியே. (௬)
மெய்தழையருள்ளங்குளிர்ந்துவகைமாறு
மென்மேற்கலந்துபொங்க
விச்சையறிவோங்க வென்னிச்சையறிவுடைவும்
விளங்கவறிவறிவதாகி
உய்தழைவளர்ந்ததெலாம் வல்லசித்தாகத்
துவட்டாதுணைநிறைநிறி
யூற்றெழுந்தென்னையந் தாளுக்கியென்னுளே
உள்ளபடியுள்ளவமுதே
கைதழையவந்தவான்கனியேயெலாங்கண்ட
கண்[illegible]ந்தநடுவே
கற்பனையிலா[illegible]ங்கு சிற்சபாமணியே
கணிப்பருங்கருணைநிறைவே

ஆய்தலைமுரப்பயித் தழைத்ததரிவேயருட்
சுகயோகயோகவுருவே
சுத்தசிவசன்மார்க்கநிதியே யருட்பெருஞ்
ஜோதிநடராஜபதியே. (௪)

எண்ணிலாவண்டபகிரண்டத்தின்முதலிலே
யிடையிலேகடையிலேமேல்
ஏற்றத்திலேயவையுளேற்றத்திலேதிரண்
டெய்துவடிவத்தன்னிலே
கண்ணுறுமருவிலேயுருவிலேகுருவிலே
கருவிலேதன்மைதனிலே
கலையாதிநிலையிலேசத்திசத்தாதிக்
கலந்தோங்குகின்றபொருளே
தென்னிலாக்காந்தமணிமேடைவாய்க்
கோடைவாய்ச்சேர்ந்தனுபவித்தசுகமே
சித்தெலாஞ்செயவல்ல தெய்வமேயென்மனத்
திருமாளிகைதீபமே
துன்னுறுசாந்தசிவ ஞானிகளுளத்தே
சுதந்தரித்தெளிசெய்யொளியே
சுத்தசிவசன்மார்க்கநிதியே யருட்பெருஞ்
ஜோதிநடராஜபதியே. (௫)

அம்புவியிலேபுவியி னடியிலேமுடியிலே
யம்மண்டலந்தன்னிலே

அகிலத்திலேபுவியி னகத்திலேயவைக்

கானவடிவாதிகளிலே

விம்பமுறவேதிறைந் தாங்கவைநிகழ்ந்திட

விளக்குமவையவையாகியே

மேலுமவையவையாகி யவையவையலாதவொரு

மெய்ந்நிலையுமானபொருளே

தம்பமிசையெனையேற்றியமுதூட்டியழியாத்

தலத்திலுற வைத்தவரசே

சாகாதவித்தைக்கிலக்கணமிலக்கியந்

தானாயிருந்தபரமே

தொம்பதமுமுடனுற்றதற்பதமுமசிபதச்

சுகமுமொன்றானசிவமே

சுத்தசிவசன்மார்க்கநிதியேயருட்பெருஞ்

ஜோதிநடராஜபதியே சிர

நீரிலேநீருற்றநிறையிலேநிறையுற்ற

நிலையிலேநுண்மைகளிலே

நிகழ்விலேநிகழ்வுற்றஇகழ்விலேநிபுடவிலே

நெகிழ்விலேநுண்மைகளிலே

ஊரிலேயந்நீரிலுப்பிலேயுப்பிலுறு

மொன்சுவையிலேநொயிலே

யுற்றநீர்க்கீழிலேமேலிலேநடுவிலே
யுற்றியலுருத்துமொளியே
காரிலேயொருகோடிபொழியினுந்துணைபெறாக்
கருணைமழைபொழிமேகமே
கனகசபைநடுநின்றகடவுளேசிற்சபைக்
கண்ணோங்குமொருதெய்வமே
தூரிலேபலமளித்தூரிலேவளர்கின்ற
சுகசொருபமானதருவே
சுத்தசிவசன்மார்க்கநிதியே யருட்பெருஞ்
ஜோதிநடராஜபதியே. (எ)
ஒள்ளியநெருப்பிலேயுப்பிலேயொப்பிலா
வொளியிலேசுடரிலேமே
லோட்டிலேகூட்டிலேயுள்ளாடுமோட்டிலே
யுறுமாதியந்தத்திலே
தெள்ளியநிறத்திலேயருவத்திலேயெலாஞ்
செயவல்லசெய்கைதனிலே
சித்தாய்விளங்கியுபசித்தாகியசத்திகள்
சிறக்கவளர்கின்றவொளியே

வள்ளியசிவானந்தமலையேசுகாதீத
வானமேஞானமயமே
மணியேயென்னிருகண்ணுண்மணியே
யென்னுயிரே யென்வாழ்வேயென்வாழ்க்கை
துள்ளுயமனப்பேயையுள்ளுறவடக்கி (வைப்பே
மெய்ச்சுகமெனக்கீந்ததுணையே
சுத்தசிவசன்மார்க்கநிதியே யருட்பெருஞ்
ஜோதிநடராஜபதியே (அ)

திருச்சிற்றம்பலம்,